Register as a N'paper Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமான.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு௵ ஐப்பசிமீ கஅஉ (1943 நவம்பர்மீ 4 வியாழக்கிழமை) [இல. ருஅ

## கிரிமியாவில் ருஷ்யர் இறங்க முயற்சி

லண்டன், நவ 2

கிரிமியாவில் கெர்ச்சிற்கு வடக்கிலும் தெற்கிலும் ருஷ்யர் துருப்புகளை இறக்க முயன்றனரென்று ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

இத்தாலியில் ஐந்தாவது சேனை கஸானோவா என்னுமிடத்தைக் கைப்பற்றி யிருக்கிறதென்று வட ஆபிரிக்கச் செய்தியொன்று அறிவிக்கிறது.

வட ஆபிரிக்காவிலுள்ளநேசநேச தலைமைக்காரியாலயத்திலிருந்து இன்று வெளியான அறிக்கையொன்று கூறுவதாவது:— ஐந்தாவது சேனை முன்னேறுகிறது. முக்கியமான இடங்களிலிருந்து சத்துரு விரட்டப்பட்டான். எட்டாவது சேனை போரிடும் பகுதியில் நம் படைகள் சத்துருவைத் தாக்கி வருகின்றன. நமது மத்தியாக வெடிகுண்டு விமானங்கள்போர் விமானத் துணையுடன் நேற்று அன்கோனு துறைமுகத்தையும் கிரிமினியிலுள்ள ரயில்வே ஸ்டேஷனையும் தாக்கின. அன்கோனு துறைமுகத்தில் சத்துரு வியாபாரக்கப்பலொன்றின்மீது வெடிகுண்டுகள் விழுந்தன. நமது கனரக வெடிகுண்டு விமானங்கள் ஸ்பேஸியா துறைமுகத்தையும் அதற்கு வடகிழக்கேயுள்ள பாலமொன்றையும் தாக்கின. ஆன்ட்ரோடோகோவிலுள்ள ரயில்வேப் போக்குவரத்து சாதனங்களும் பெஸ்பரோவிற்கு வடமேற்கேயுள்ள ரஸ்தா சந்திகளும் நம் விமானங்களால் தாக்கப்பட்டன. போர் அரங்கத்திலுள்ள சத்துரு போக்குவரத்து சாதனங்களும் பாலங்களும் தாக்கப்பட்டன.

சத்துரு விமானங்கள் நேற்றிரவு நேப்பிள்ஸ் பகுதியைத் தாக்கின. நமக்கு சேதமொன்றும் ஏற்படவில்லை. சத்துரு விமானங்களில் இரண்டு சுட்டு விழுத்தப்பட்டன. இந்த எல்லா நடவடிக்கைகளிலும் நான்கு சத்துரு விமானங்கள் சுட்டு விழுத்தப்பட்டன. நமது விமானங்களில் இரண்டு காணப்படவில்லை.

## யாழ்ப்பாணம் - மன்னார்ப் புகைரதம்

மன்னார்ப் பகுதிப் பிரதிநிதியாகிய மிஸ்டர். J. I. ஞானமுத்து அவர்கள் இன்னுஞ் சிலருடன் போக்குவரவுப் பகுதி மந்திரியைச் சென்றவாரஞ் சந்தித்து, தம் மன்னார்ப் புகைரதப் பாதையிற் பிரயாணஞ் செய்வோர்க்கு உள்ள சில வசதியீனங்களை எடுத்துச் சொன்னார்; விசேஷமாக மதவாச்சிப் புகைரதத்தானத்திற் பிரயாணிகள் நீடித்த நேரம் தாமதித்து நிற்பதையும் அதனால் அப்பிரயாணிகட்கு நேருங் கஷ்டங்களையும் குறித்த பிரதிநிதி யெடுத்துக் கூறியுள்ளார். அம் முறையீட்டினைக் கேட்ட மேற்படி மந்திரி தாம் வேண்டிய வசதிகளை விரைவிற் செய்வதாகவும்,

## இத்தாலிய மன்னர் தடையாக விருக்கிறார்

நியூயார்க், நவ 2

மன்னர் விக்டர் இம்மானுவேல் அதிகாரத்தில் இருக்கும் வரை தான் பிரதிநிதித்துவம் வாய்ந்த அரசாங்கம் ஒன்றை அமைக்கமுடியாதென்று மார்ஷல் படோக்லியோ இத்தாலிய மன்னரிடம் நேற்றுக் கூறியதாகத் தென் இத்தாலியிலுள்ள அஸோஸியேட்டட்பிரஸ் நிருபர் அறிவிக்கிறார்.

## வெங்காய வியாபாரிக்கு ரூ. 850 அபராதம்

காலி, அக் 31

காலியைச் சேர்ந்த எச். அப்புஹாமி என்னும் வியாபாரி விலைக் கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு மிதமிஞ்சிய லாபத்திற்குக் கால் றுத்தல் வெங்காயம் விற்றதற்காகவும், விற்பனை சம்பந்தமான பசிதொன்றைக் கொடுக்கத் தவறியதற்காகவும் ரூபா 850 அபராதம் விதிக்கப்பட்டார். ஒரு றுத்தல் வெங்காயத்தின் விலை 17 சதமாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கையில் எதிரி கால்றுத்தல்வெங்காயத்துக்கு 10சதம் வாங்கியதாகத் தெரிகிறது.

## கந்தானைப் பகுதியில் அழுகிய பிரேதம்

நேற்று முந்தினம் இரவு கந்தானைப் பகுதியிலுள்ள உள்வத்த கெவாவை யென்னும் கிராமத்தில் அழுகிய பிரேதமொன்று கடற்கரையில் ஒதுக்கப்பட்டிருந்தது.

காலகதியடைந்தவரிடமிருந்த ஒரேயொரு வஸ்து பிரேதத்தின் இடது கையில் கட்டப்பட்டிருந்தது. வெள்ளிக்கிழமை பிற்பகல் கொழும்புக்குச் சமீபத்தில் திருவாங்கூர் மகாராஜாவின் கப்பலொன்று சேதமடைந்தபொழுது காணாமற் போன நால்வரில் காலகதியடைந்த வருமொருவராகவிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது.

## இலங்கையின் குடி மதிப்பு 65 லட்சம்

இலங்கையின் ஜனத்தொகை 64,19,485 பேரென ஏப்ரல் மாதம் 16-ந் தேதி மதிப்பிடப்பட்டது. ஒவ்வொரு ஊரிலும் வசிக்கும் ஜனங்களின் புள்ளி விபரம் தயாரிக்கப்பட்டதைக்கொண்டுதான் குறித்த விபரம் தெரிய வந்திருக்கிறது. இவ்வெண்ணிக்கையில ராணுவத்தினரின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை.

---

சிறாவத்துளமென்னும் புகைரதத் தங்குமிடத்திற் பொருள் பண்டம் வைத்துப் புகைரதத்தில் ஏற்றுதற்காகிய ஒரு கட்டடம இடுவதாகவும் வாக்களித்துள்ளாராம்.

## ஆயுர்வேத முறையைத் திருத்தி அமைத்தல்

சுதேச வைத்தியக் கல்லூரியைச் சேர்ந்த ஆயுர்வேத மாணவர் காங்கிரஸ் சனிக்கிழமை கூடியபொழுது ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா பேசுகையில் ஆயுர்வேத வைத்திய முறைகளைத் திருத்தி அமைக்கும் ஆலோசனைகளைச் சுதேச வைத்தியச் சபை பரிசீலனை செய்து வருவதாகத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இலங்கையிலுள்ள இந்திய அரசினர் பிரதிநிதி திரு எம். எஸ். ஆனே பேசுகையில் அரசாங்கம் மாறியதுடன் பல காரணங்களை முன்னிட்டு ஆயுர்வேத வைத்திய முறை சீர்கெட நேரிட்டதாகவும் சமீபத்தில அரசியல் லட்சியம் மாறியதன் விளைவாகப் புத்துணர்ச்சியேற்பட்டதாகவும் குறிப்பிட்டு இலங்கையும் இந்தியாவும் ஒன்று சேர்ந்து ஆயுர் வேதத்தின் உரிமைகளுக்காகப் போராடவேண்டுமென்று கூறினார்.

அடுத்தபடியாக சுதேச வைத்தியக் கல்லூரித் தலைமை ஆசிரியரான டாக்டர் ஏ. என். எஸ். பணிக்கர் பேசுகையில், இலங்கையில் இந்தியாவிலேற்பட்டதைக் காட்டிலும் கூடுதலான புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்று குறிப்பிட்டார். இலங்கை தன் சொந்த ஆயுர்வேத முறையை ஏற்படுத்திக்கொண்டதென்று டாக்டர் கூறினார்.

பின்னர், வைத்திய சுகாதார உதவி டைரக்டர் டாக்டர் டபிள்யூ ஜீ. விக்கிரமசிங்க பேசுகையில ஓர் நாட்டில் சிகிச்சைமுறைகளுடன தடைமுறைகளும் கற்றுக்கொண்டாலன்றி அதன் மக்களின் ஆரோக்கியம விருத்தியடைவதாகச் சொல்லவதற்கில்லையென்று கூறினார்.

அதன் பின்னர், திரு. எஸ். எல். வி. கப்புக்கொட்டுவா பேசினார். மேல்நாட்டு வைத்தியரிடையே இருந்துவரும் தொழிற்சங்க முறையை ஆயுர்வேத வைத்தியர்கள் கைக்கொள்ள வேண்டுமென்று திரு. கப்புக்கொட்டுவா கூறினார். குறித்த முறை காரணமாக விஞ்ஞானத்தின் லட்சியத்திற்கும வைத்தியத் தொழிலுக்கும மிகக புகழ் ஏற்பட்டதாக அவா குறிப்பிட்டார்.

## ஆயுஷ்யோமம்

யாழ்ப்பாணம் வழக்கறிஞர், ஆசிரியர் பிரமஸ்ரீ. சி. பொ. சுந்தரசர்மா அவர்களது பெண்குழந்தையாகிய காமாக்ஷியின் ஆண்டு நிறைவுவிழா சென்ற திங்கட்கிழமை நிகழ்ந்த போது பெற்றோர் அக்குழந்தையின் பொருட்டுச் செய்வித்த ஆயுஷ்யோமச் சடங்கில், மேற்படி குழந்தையின் அன்னையாகிய ஸ்ரீமதி அமிர்தாம்பாள் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக்கு நன்கொடையாக ரூபா 3 அனுப்பியுள்ளார்.

## இப்படிச் செய்யவொண்ணாதா?

சென்ற வைகாசி மாதத்தில் பெருவெள்ளம் போட்டதற்குப் பின் மழை பெய்யவில்லை; கமக்காரர்கள் எல்லோரும் அரிசிப் பஞ்சத்தினால் நேர்ந்தோனாலும் தங்கள் வயல்களுக்குப் பெரும்பொருள் செலவிட்டு உழுது எருவிட்டு இருந்தும் ஆவணிமாதத்தில் மழை பெய்யாமையினால் ஏற்றகாலத்தில் விதைக்காது விட்டு ஆவணி மாதம் பிற்பகுதியில் ஒருவாறு புழுதியில் விதைக்கலானார்கள். அப்படி விதைத்த சில வயல்களின் அதிகமழைபெய்தமையினால் மூளைவெள்ளம் போட்டுநெற்பயிர்களெல்லாம் அரைவாசிக்கு மேற் சேதப்பட்டனவாயின. அதிகம் பள்ளக்காணிடம் அதிகம் மேட்டுக்காணியும் அல்லாத நடுத்தரமான காணிகளிலே பயிர் செழித்தோங்கி வளருகின்றன. கமக்காரர்கள் தங்கள் வயல்களிலுள்ள நெல் கூற்று பிடி 1-க்கு 24 சதம் விலைசொல்லுகிறார்கள். இப்படியாக இருபத்தைந்து ரூபாவுக்கு வாங்கும் நெற்பயிர் 3 பரப்பு நிலத்துக்கு மட்டும் நடக்கூடியதாக இருக்கும். இப்பஞ்சகாலத்தில் இப்படியான விலைக்கு வாங்கி நடமுடியாததலால் அதிகாரிகள் அரிசி முதலியவைகட்கு விலைகட்டுப்பாடு செய்தது போல் நெல் நாற்றிற்கும் ஓர் விலையைக் கட்டுப்பாடு செய்தால் இங்குள்ள கமக்காரர்களுக்கு ஓர் பெரிய உபகாரமாக இருக்கும். இதை இப்படிச் செய்ய வொண்ணாதா? என ஒரு கமக்காரர் முறையிடுகிறார்.

## வேலணை கிழக்கு

"சந்திரா" ஐக்கிய பண்டகசாலை

இப்பண்டகசாலை, வேலணை கிழக்கில் உள்ள வங்களாவடி வேலணைத் துறை, அம்மன் கோவிலடி முதலிய விடங்களுக்கெல்லாம் மத்தியாகவுள்ள இடத்தில் நிறுவப்பட்டிருக்கின்றது. இது தற்போது பதிவுகாரியஸ்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது. பண்டங்கள் மிக விலையுயர்ந்த இக்காலத்தில் வேலணை மக்கட்கு, ஆதரவளிக்க மிக வின்றியமையாததொன்றாக, இப்பண்டகசாலை விளங்குகின்றது. பிரசித்தஞ்செய்து பொதுக்கூட்டங்கள் பல கூட்டிப் பண்டகசாலைகளின் இன்றியமையாமையை நன்கு விளக்கிப் பொதுமக்களுக்குப் பெரிதும் உணர்ச்சியை யுண்டாக்கி, அவர்களின் விருப்பத்தின்படியே இப்போது நலத்தொண்டில் ஈடுபட்டிருக்கின்றனர். இங்ஙனம் இப்பொது நலத்தொண்டில் ஊக்கமெடுத்த அன்பர்களுக்கு யாங்கள் மிகக் கடமைப்பட்டுள்ளோம். இது மட்டுமல்ல இன்னும் இதுபோன்ற அரிய பொதுநலத் தொண்டுகளை இப்பண்டகசாலை வாயிலாக ஆற்றி நாட்டினை வளர்க்குந் திருவை நீர்வாகிகட்கு, நல்குமாறு எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம். மற்றும பல மக்களின் இன்றியமையாத நன்மையைக் கருதி நிறுவப்பெற்ற இப்பண்டகசாலையை மிகவிரைந்து பதிவுசெய்துதவுமாறு பதிவுகாரியஸ்தர் அவர்களை மிகமிகப் பணிவாக வேண்டிக்கொள்கின்றேன்.

இங்ஙனம்
க. வேந்தனார்
வேலணை கிழக்கு
2—11—43

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஸ்ரீ
ஐப்பசிமீ ௧௮உ வியாழக்கிழமை

## மாணவர் தோட்ட முயற்சி

பள்ளிக்கூடங்களிற் படிப்பவர்களாகிய மாணவர்கள், அவர்களுள்ளும் விசேஷமாக ஆண்பிள்ளைகள் விவசாயத் தொழிலைப்பயின்று கொள்வது ஆவசியகமென்றும், இக்காலத்தில் இங்குள்ள மக்களுக்கு அரசினரால் ஊட்டப்படுங் கல்வி பயிரிடுந் தொழிலில் மாணுக்கர்க்கு ஆர்வத்தை ஆக்குதலின்றி வெறுப்பினையே விளைக்கக்கூடியதென்றும் இப்பத்திரிகையில் முன்னர்ப் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டியுள்ளோம். மாணுக்கராயுள்ளார், அவர்களுள்ளும், ஆங்கில கலாசாலைகளிற் கல்வி பயிலும் மாணுக்கர்கள் படிப்போடு பயிரிடுந் தொழிலையும் பயின்று செய்வது தங்களுக்குப் பெருமைக் குறைவென்ற வெண்ணத்துடனேயே இன்றுங் காணப்படுகின்றனர். இந்த மாணுக்கர்கள் எவ்வகையான பயனுந்தராத பந்தடி முதலிய விளையாட்டுக்களிலே கொண்டுள்ள ஆர்வத்தில் ஆயிரத்திலொரு கூறுகொண்ட ஆர்வத்தைத்தானும் இந்த விவசாய விஷயத்திற் பாராட்டி நடப்பரேல் இவர்களுக்கும் இவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் உணவு விஷயமாக இவ்வளவு கஷ்டம் ஏற்பட்டிருக்க மாட்டாதென்று சொல்லலாம்.

பாவம், இந்த மாணவரை மாத்திரம் இவ்விஷயத்திற் குறைகூறுவது சரியல்ல; இவர்களுடைய பெற்றோர்கள், உபாத்தியாயர்கள், வித்தியாசாலைகளின் அதிகாரிகள், அரசாங்க வித்தியாபகுதியாராகிய எல்லாரும் இந்நாட்டு மக்களுக்குப் போதிய உணவுப் பொருள்களை இந்நாட்டிலேதான் ஆக்கிக்கொள்ளவேண்டுமென்று முந்தியே சிந்தித்து முயற்சி செய்திலர். “பட்டாலறிவன் சண்டாளன்” என்றபடி யுத்தம்நேர்ந்து, யுத்தங்காரணமாகப் பஞ்சநேரத் தலைப்பட்டபிறகுதான், இந்தியா முதலியவேற்று நாடுகளிலிருந்து இங்கே எவ்வகையான உணவுப்பொருள்களும் இறக்குமதி செய்யப்படாதொழிந்த பிறகுதான், நாம் மேலே எடுத்துக் காட்டிய மக்களுக்கெல்லாம் பஞ்சத்தின் உறைப்பும் போதிய உணவுப்பொருள்களைச் சொந்த நாட்டிலே ஆக்கிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமும் புலப்படலாயின. இப்பொழுது புலப்பட்டுத்தான் ஆவதென்ன? விவசாயத் தொழிலை நினைத்த மாத்திரத்திலே பயின்று செய்யலாமென்றால் அது சாத்தியப்படுமா? இந்த உலக யுத்தம் தொடங்கிய காலத்திலாவது இந்த மக்கள் இவ்விவசாயத் தொழிலைவிட்டுச் சிந்தித்தார்களா? இல்லை! பஞ்சம் வந்து தம்மை வருத்தத் தலைப்பட்டபிறகுதான் செய்வதின்னதென்று தெரியாது விழிக்கின்றார்கள். எங்கள் அரசினரும் இப்பொழுதுதான் விவசாய விஷயமாக உணவு விஷயமாக ஏதும் முயற்சி செய்யத் தொடங்கியிருக்கின்றார்கள்.

இலங்கையிலே சமயோசிதமாக நியமிக்கப்பட்டுள்ள நிலப்பகுதி யதிகாரி பள்ளிக்கூடப் பிள்ளைகளும் பள்ளிக்கூடத்தோடு தொடர்பான நிலங்களில் உபாத்தியாயர்களுடன் சேர்ந்து பயிரிடும் தொழிலிலும் தோட்டஞ் செய்வதிலும் ஈடுபட்டு உழைத்தல் வேண்டுமென்ற கொள்கை பூண்டு முயற்சி செய்கின்றார். இது மிகவும் சிறந்த முயற்சியாகும்; ஆனால் இந்த முயற்சி எவ்வளவுக்கு அநுகூலமடையுமோ என்பதை இப்பொழுது நாம் சொல்லமுடியாது. நமது நாட்டிலே ஆகக்கூடியனவும் உணவுக்கு இன்றியமையாதனவுமாகிய பொருள் பண்டங்கள் அகப்படாமையினால் இங்குள்ள மக்களாகிய நாங்கள் தினந்தோறும் கஷ்டப்படுகின்றோம். கறிக்குரிய வெஞ்சனங்களாகிய வெண்காயம், மிளகாய், மல்லி, மிளகு என்னுமிவைகள் போதிய அளவிற்கு இங்கே அகப்படாமையால் இந்நேரத்திற் பெரிதுங் கஷ்டப்படுகின்றோமே. இந்த நான்கு வெஞ்சனங்களும் இவ்விலங்கையிற் பலவிடங்களில் வேண்டிய அளவிற்குப் பயிரிடத் தக்கனவாம். இன்னும் இங்குள்ள மக்களின் நித்திய வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுப் பொருள்கள் பல எங்கள் நாட்டில் விருத்திபண்ணத் தக்கனவென்று விவசாயப்பகுதி யதிகாரிகளே வெளியிடுகின்றார்கள். இப்பொருள்களை மேலே சொல்லப்பட்ட வித்தியாசாலை ஆசிரியர் மாணுக்கர் மூலமாக ஆக்கிக்கொள்வதற்கு முயற்சி செய்யலாகுமே. ஆங்கில கலாசாலைகள் வித்தியாசாலைகளுக்கு உரியனவாய்ப் பரந்து கிடக்கின்ற விளையாட்டு முன்றில்களையெல்லாம் காலத்திற்கேற்றவாறு, நீர்ப்பாய்ச்சுதற்காகிய கிணறுகளைத் தோண்டிச் சிறந்த தோட்ட நிலையாக்கி உபாத்தியாயர்களும் மாணுக்கர்களும் பயிரிடுந் தொழிலையே செய்யத் தொடங்குவரேல் அந்த மாணுக்கருக்காக, உபாத்தியாயர்களுக்காக என்ன குறை நேரப்போகிறது. எந்த நேரமும் அரசினர் தாம் எங்களுக்கு உணவுப்பொருள் விஷயத்திலே துணைபுரிவர் என்றாலும் அந்நியநாடுகளிலிருந்து எங்களுக்குப் போதியஉணவுப் பொருள் வந்து சேருமென்ற இந்த எண்ணங்களை இப்பொழுதாவது கைவிட்டு இனிவருங்காலங்களில் இந்நாட்டிலேயே பஞ்சந்தலைகாட்டாவண்ணம் உணவுப்பொருள் விருத்தியில் பயங்கரமான பஞ்சத்தைப்பற்றிக் கேள்விப்பட்டபிறகும் மனதில்வைத்துக் கொள்ளலாகுமா? “சிரைத்தேடின் ஐரைத்தேடு” “தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது” என்ற இந்த முதுரைகளைக் கல்லாது விடுத்து விபரீத புத்திகொண்டு நவீன முயற்சிகளிலே தலையிட்டமையினுற்றான் எங்களுக்கு இக்கெடுதி நேரலாயிற்றென்பதை இனியேனும் உணர்ந்து நாமெல்லோரும் பயிரிடுந் தொழிலையே ஊக்கங்கொண்டு உழைத்தல் வேண்டும்.

# உலகம்பல்விதக் கதை

(முற்றொடர்)

### “....ஆகுநாளன்றி எடுத்த கருமங்கள்ஏலா....”

அந்தப் பெரியவர் சொன்னதை யிட்டுக் கவலைப்பட்டுக்கொண்டு நான் இருக்கும்போது இன்னுமொரு அன்பர் என்னிடம் வந்தார்; என் மகனுக்கு எங்கேனும் விவாகம் பேசும்படி அவரிடம் நான் முந்தியே சொல்லியிருந்தேன்; அவர் வந்தவுடனே அவரை உபசரித்து இருக்கச்செய்து “அம்மான், ஏதும் விசேஷமுண்டோ” என்று ஆவலுடன் கேட்டேன்; அவருடைய பெயர் கந்தர்; எல்லாரும் கந்தரம்மான் என்று அவரை யழைப்பது வழக்கம். சிலர் நேரிற் பேசும்போது அம்மான் என்று விளித்துப்பேசுவதுமுண்டு; அதனாற்றான் நானும் ‘அம்மான்’ என்று அழைத்தேன்; அவர் என்னைப் பார்த்து “தம்பி விசேஷம் அதிகமில்லை; உம்முடையபிள்ளையின் கருமத்தை நான் மறந்துபோகவில்லை; நான் நல்லாய் அறிந்த சில இடங்களில் உசாவிப்பார்த்தேன்; அதிகமாகச் சொத்தத்துடன் பெண்ணுண்டு என்று சொன்னார்கள்; ஒரு இடத்திலே மாத்திரம் ஒரு மாப்பிள்ளையுண்டு; அந்த மாப்பிள்ளைக்கு இனஞ்சனத்தில் வசதியான பெண்ணில்லையாம்; நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வாலிபன்; போதிய பொருள்பண்டம் காணிபூமி யுண்டு; நல்ல தோற்றமானவன்; வயசும் இருபதுக்கும் இருபத்தைந்துக்கும் இடையில் மதிக்கலாம்; சாதி மரபும் உங்களோடு ஒத்தவரும்; ஆனால் “பையன்” இப்பொழுதும் படிக்கிறான்; படிப்பிலும் கெட்டிக்காரனும்; தாய் தாப்பனுக்கு ஒரேயொரு பிள்ளை; குணமான பிள்ளை போற் காணப்படுகிறான்; கண்டு நேரிற் பேசிப்பார்த்தேன்; இதமான பேச்சு; உசிதமான நடை; எனக்கு அந்த வாலிபனிடத்தில் மனம் படிந்தது; படிப்பு முடிந்த பின் தான் அந்தப் பிள்ளைக்கு ஏதும் சம்பந்தவிஷயமாகப் பெற்றோர் முயற்சி செய்வார்களாம்; தம்பி, உமக்கு இதைப்பற்றிச் சொல்லி உம்மோடும் கலந்து யோசித்து உமது சம்மதத்தை யறிந்து பிறகு கருமத்திற் பிரவேசிக்கலாமென்று யோசித்துக்கொண்டுதான் இப்பொழுது இங்கே வந்தேன்” என்று சொன்னார். “அம்மான், நீங்கள் சொல்வது முழுவதுஞ் சரி; ஆனால் இப்போதைக்கு அந்தப்பிள்ளைக்குச் சம்பந்தஞ் செய்து வைக்கப் பெற்றோர் சம்மதிக்கமாட்டார்களென்று சொல்லுகிறீர்களே; அப்படியானால் என்ன செய்வது; தாயில்லாப் பிள்ளையை நான் எவ்வளவுகாலம் வைத்துக் கட்டிக் காத்துக்கொண்டிருப்பது? வடலி வளர்த்துக்கள்ளுக் குடிக்கக்காத்திருக்கலாமா; அந்த அந்தக் காலத்திலல்லவா அந்த அந்தக் கருமத்தைச் செய்துவைக்க வேண்டும்; மணுஷன் காயம் நிச்சயமானதா? ஏன், அவர்கள், சந்தித்தமானல், இப்பொழுதே விவாகத்தைத் தம் பிள்ளைக்குச் செய்துவைத்துவிட்டுப் பிறகும் படிக்கவிடலாமே; அப்படி வாரில் நடப்பதுமுண்டுதானே; அம்மான், அப்படி ஏதும் ஒழுங்கு செய்யலாமென்றால் அந்த விஷயத்திலே தலையிடுங்கள்; அல்லாவிட்டால் வேறெங்கேனும் பாருங்கள்; இந்தக் கருமத்தைச் சிரத்தையோடு பார்ப்பீர்களானால், தாயில்லாக் குமரை ஒரு கரைசேர்த்த புண்ணியம் உங்களுக்குக் கிடைக்கும் என்று அவருக்குச் சொல்லியிரந்தேன்; என் பரிதாபத்தைப் பார்த்துவிட்டு அவரும் “தம்பி, நீர் கவலைப்படவேண்டாம்; உம் பிள்ளை வேறு என் பிள்ளை வேறென்று நான் எண்ணவில்லை; நான் என்னால் இயன்ற முயற்சி செய்கிறேன்; ஆனால் நீர் அதிகம் அவசரப்படவேண்டாம்; அடுத்துமுயன்றாலும் ஆகுநாளன்றி, எடுத்த கருமங்கள் ஏலா என்று பெரியோர் விதித்திருக்கிறார்கள்; நடக்கவேண்டிய காலம் வந்தாற்றான் எதுவும் நடக்கும்; சரி, உமக்குச் சம்மதமானால் அந்த வீட்டிற்போய்ப் பெற்றோர்களுடன் பேசிப்பார்க்கிறேன்; நியாயங்களையும் எடுத்துச் சொல்லுகிறேன்; கருமங் கைகூடுமானால் நான் பிறகு உம்மை வந்து காணுவேன்” என்று கந்தர் எனக்குத் தேறுதல் சொன்னார்; நானும் ஒருவாறு மனந்தேறினேன்”

### “கல்யாணஞ் செய்யக் கனவிலும் உடன்படேன்”

“குழந்தாய், புவனம்! ஒருவாறு மனந்தேறிய நான், முந்திச் சொன்ன பெரியவர் எனக்குக் கல்யாணம் பேசி வந்த செய்தியைக் கந்தருக்குச் சொல்லிச் சிரித்தேன்; அப்படிச் சொல்லக்கேட்ட கந்தர் நான் நினைத்தபடி சிரித்திலர்; சிறிது நேரம் யோசித்துவிட்டு என்னைப் பார்த்து “தம்பி, அந்தப் பெரியவர் சொன்னதிலும் நியாயமுண்டு; எதனையும் எடுத்தவுடன் எறியவொண்ணாது; கேட்டவுடன் மறுக்கவொண்ணாது; ஆய்ந்தோய்ந்து பதில் சொல்லவேண்டும்” என்று ஆறுதலாகச் சொன்னார். “என்ன, அம்மான்; என் விஷயமெல்லாமறிந்த நீங்களுமா இப்படிச் சொல்லுகிறீர்கள்” என்று நான் மனவருத்தத்தோடு அவருக்குச் சொல்ல, அவர் “அப்படியல்ல, தம்பி, உம்முடைய பிள்ளைக்கு உற்ற ஒரு பெண்துணை வேண்டுமெனறுதான் நானும் நினைக்கிறேன்; அப்படி நினைத்துத்தான் அந்தப் பெரியவரும் உமக்குச் சொல்லியிருக்க வேண்டும்” என்றார். கந்தர் சொன்ன வார்த்தை என் மனத்தில் ஆத்திரத்தை ஆக்கிவிட்டது; “அம்மான்; வீண் வார்த்தை பேசாதீர்கள்; என் அருமையான பிள்ளைக்காக நான் இந்த உலகத்திலே வாழுகிறேனேயொழிய எனக்கு இன்னுமொரு வாழ்க்கை வேணுமென்று நான் இருக்கவில்லை; வாழவேண்டிய காலமெல்லாம் வாழ்ந்து முடிந்தது; என் பிள்ளைக்குத் துணை வேண்டுமென்றதற்காக ஒரு பெண் துணையைத் தேடிவிட்டிருக்கிறேன்; அவ்வளவுந்தான் நான் செய்யத்தக்கது; என் பிள்ளைக்குத் துணை தேடுகிறேனென்று சொல்லி எனக்கொரு துணையைத் தேடிவிட்டால், என் வாழ்க்கை “கோவணமொன்றிச்சிப்பக் கூடினவே பந்தமெலாம், ஆவணஞ்சேர் மேனியாய் சேரமேசர...” என்ற வித

(தொடர்ச்சி ௫-ம் பக்கம்)

# தீபாவலி

(கொழும்பு விவேகானந்தசபை ஆதரவில் தீபாவலித்தினத்தன்று வானொலி நிலையத்தில்
திரு. குல. சபாநாதன் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு)

இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளுள் தீபாவலியும் ஒன்றாகும். இத்தீபாவலிப்பண்டிகை ஆண்டுதோறும் ஐப்பசி மாதத்து அபரபக்கத்துச் சதுர்த்தசி பொருந்திய வைகறை தொடங்கி நின்று கொண்டாடப்படும். இப்புண்ணிய நாளிலே உரிய பொழுதில் எண்ணெய் தேய்த்து நீராடி, புத்தாடையுடுத்து, அணிவன அணிந்து பூசுவன பூசி, திருக்கோயிலையும் பெரியோரையும் கண்டு வழிபட்டு, தூயவுணவுகளை வறியவர்க்கீய்ந்து விருந்தினர் சுற்றத்தாரோடு உண்டு மகிழ்வது வழக்கம். இவ்வளவே தீபாவலிக் கொண்டாட்டமாகும்.

இத்தீபாவலித் தினத்தில் இப்பண்டிகையின் வரலாற்றையும் அறிந்துகொள்வது நன்றாதலின், இயன்றவரை சுருக்கமாக அதனைக் குறிப்பிட விரும்புகிறேன். தீபாவலி என்பது விளக்குவரிசை எனப் பொருள்படுமெனினும், ஈண்டு விளக்கு வழிபாடு எனப்பே பொருத்தமுடைய கருத்தாகும். ஆகவே, தீபாவலிக் கொண்டாட்டத்தன்று விளக்கேற்றி அவற்றை வழிபடுவது தான் சிறந்த நோக்கமாயிருத்தல் வேண்டுமென்பதாயிற்று. ஆனால் இத்தினத்தன்று விளக்கேற்றி வழிபடல்வேண்டுமென்னும் நோக்கம் தென்னிந்தியரிடை இப்பொழுதிருப்பதாகக் காணப்படவில்லை. ஆயினும் இது வடஇந்தியரிடைக் காணப்படுகின்றது. தீபாவலியெனினும் தீபாவளியெனினுமொக்கும்.

இத்தீபாவலித்தினத்தன்று நரகசதுர்த்தசி விழாவும் கொண்டாடப்படுகின்றது. இவ்விழாவும் அக்கொண்டாட்டமும் ஒருநாளில் ஒருங்கு கொண்டாடப்படுவது பற்றி வேற்றுமை தெரியாமல் இரண்டும் ஒன்றென்று பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அது தவறான எண்ணமாகும். நரகசதுர்த்தசிவிழாவேறு தீபாவலிக் கொண்டாட்டம்வேறு, நரக சதுர்த்தசி விழாத் தொடங்குவதற்கு மிகமுந்திய காலந்தொட்டே தீபாவலிக் கொண்டாட்டம் இருந்து வருவது; இந்துக்கள் எல்லாரும் சாதிமத வேற்றுமையின்றிக் கொண்டாடும் கொண்டாட்டம் தீபாவலியும் தைப்பொங்கலுமென்னும் இவ்விரண்டுமேயாகும்.

திருக்கார்த்திகை நெருப்புப் பிறந்தநாளும், தீபாவலி விளக்குப் பிறந்த நாளுமாகும். நெருப்புப் பிறந்த நாளென்பதுபற்றித்திருக்கார்த்திகையன்று இந்துக்கள் விளக்கேற்றி, நெருப்பை வழிபடுகின்றார்கள். ஆகவே திருக்கார்த்திகையன்று விளக்கேற்றினாலும் அது நெருப்பு வழிபாடேயாகும். விளக்கு வழிபாட்டுக்கு எண்ணெயும் நூலும் இன்றியமையாதனவாதலால், விளக்குப்பிறந்த சுவாதி நாளன்றே நூலும் நூலாடைகளும் எண்ணெயும் வழிபடப்பெறும். நரக சதுர்த்தசியெனும் பெயர்வந்ததைக் குறிப்பதற்கு ஒரு கதை வழங்கப்படுகின்றது. ஸ்ரீ கிருஷ்ண பகவான் பூலோகத்தில் அவதரித்து திருவிளையாடல்கள் புரிந்து வருங்காலத்தில், பிராக்ஜ்யோதிடபுரம் எனும் நகரில் நரகாசுரன் என்னுமோர் அரக்கன் ஆட்சி புரிந்து வந்தான், இவன் பன்றிவடிவு கொண்ட திருமாலுக்கும் நிலமகளுக்கும் பிறந்தவன். இவன் செயற்கரிய தவஞ்செய்து பலவரங்களைப் பெற்றிருந்தானெனினும், செல்வச் செருக்கினால் கொடுங்கோலாட்சி நடாத்தத் தொடங்கினான். இவன் தேவர்களுக்கும் மக்களுக்கும் சொல்லொணாத் துயரிழைத்து வந்தான். மேலும் தேவேந்திரனுக்கும் அவனுடைய தாயார் அதிதி தேவியாருக்கும் பெருந் துன்பங்களைச்செய்து அத்தேவியாருடைய காதணிகளையும் கவர்ந்து சென்றான். விஸ்வகர்மாவினுடைய மகள் முதலாய பல கன்னியர்களையும், கந்தருவப் பெண்களையும் சிறைசெய்து 16,000 மகளிரைச் சிறையில் வைத்திருந்தான். இவனுடைய கொடுங்கோலாட்சிக் காலத்தில் நற்செயல்கள் யாவும் மடங்கி தீச்செயல்கள் யாவும் தலைவிரித்தாடின. இங்ஙனம் துன்பம் எய்திய தேவர்களும் மக்களும் முறையிட்டமையால், கருணை வள்ளலாகிய ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா போர்க்கோலங் கொண்டு சத்தியபாமை தேரோட்ட தேரிற் புறப்பட்டு பிராக்ஜ்யோதிடபுரஞ் சென்று நரகாசுரனுடன் போர் தொடுத்தார். நரகாசுரனும் சதுரங்க சேனையுடன் கண்ணபிரானை எதிர்த்துப்போர்செய்தான். நரகாசுரன் விடுத்தபாணமொன்றினால் ஸ்ரீ கிருஷ்ணன் சோர்ந்து தேரின் மீது சாய்வதைக்கண்ட சத்தியபாமையார் தம்முடைய கணவனைத் தேற்றியதுமன்றி, தாமே வில்வளைத்து அளவற்ற பாணங்களைத் தொடுத்து, கொடிய நரகாசுரனுக்கு அதிக துன்பத்தை வருவித்தார். களைதெளிந்த கண்ணபிரான், அண்டங்கள் யாவும் நடுக்கிடும்படி தனது சக்கரப்படையை உபயோகித்து அவ்வசுரனைக்கொல்ல, அவன் இறக்குந் தருணத்தில நல்லுணர்ச்சி பெற்றவனாய் தான்செய்த குற்றங்களை உடன்பட்டு, ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிடம் மன்னிப்புக்கேட்டு, கடவுட் கொள்கை பரவுதற் பொருட்டு, தான் இறக்கும் இவ்வைப்பசி மாதத்து அபரபக்கத்துச் சதுர்த்தசி தோறும் மக்கள் நீராடிப் புத்தாடை உடுத்து பாவச் செயல்களை நீக்கி இறைவனைத் தொழுது மகிழுமாறு செய்விக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டமைக்கேற்ப, கண்ணபிரான் இட்ட கட்டளையால் இத்தீபாவலிப்பண்டிகை கொண்டாடப்பட்டு வருகின்றதென்பர். இது இறந்ததுபற்றிக் கொண்டாடப்படுவது என்பதற்கு திதியின் பெயரால் வழங்கப்படுவதும் ஒரு சான்றாகும்.

இனி, விஷ்ணுபுராணம் இக்கதையைச் சிறிதளவு வேறு உருவத்தில் கூறுகின்றது. தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்த பொழுது, ஆலகால விஷம் முதலாகப் பல பொருள்கள் தோன்றின. ஈற்றில் மகாலக்ஷ்மி தோன்றினாள். இத்திருமகளை மகாவிஷ்ணு தம் மனைவியாக ஏற்றுக்கொண்டார். அக்காலத்தில் கொடிய ஆட்சி புரிந்து வந்த நரகாசுரனைக் கொல்லுமாறு திருமகள் தன்னுடைய கணவனை வேண்டிக்கொண்டாள். இதற்கிசைந்து விஷ்ணுவும் அவ்வரக்கனைக் கொன்று, தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் ஏற்பட்டிருந்த துன்பத்தை நீக்கியருளினார். எனவே திருமகள் அவதாரஞ்செய்து திருமாலை மணந்து, தன கணவன் மூலம் இவ்வசுரனைப் போக்கியதாக இத்தீபாவளி கொண்டாடப்படவேண்டுமென்பது இப்புராணத்தின் கருத்தாகும்.

இனி, இன்னொரு சாரார் இப்புராணக் கதைகளை ஒதுக்கி, சரித

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# கம்பரை விஞ்சிய கச்சியப்பர்

## கந்தபுராணத்துக் காட்சிகள்

[ தென்புலோலியூர், திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் ]

"பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்று சொல்லுவார்கள். ஒருவருடன் - ஒருபொருளோடு - நெடுங்காலமாகப் பழகி - ஈடுபட்டு - வந்தால் அதில் ஒருவிதமான வெறுப்பு உண்டாவது இயற்கை; நாம் விரும்பாமல் இருக்கவே அது ஏற்படும். இது நாளாந்த வாழ்க்கையில் மாத்திரமல்ல, கல்வி விஷயத்திலும் உண்மையாகவே காணப்படுகின்றது.

சிலவருடங்களாக, கம்பர் கவிகளை எடுத்துப் பலர் ஆராய்ச்சிசெய்தார்கள். பாடங்கள்-நயங்கள்-கவின்கள் எல்லாவற்றையும் எடுத்து வியந்தார்கள். பத்திரிகைகளில் எல்லாம் பக்கம் பக்கமாக எழுதிக் குவித்தார்கள். ஒருவர் சொல்லிய சிறப்பையே மற்றவரும் திருப்பித் திருப்பிக் கூறினர்; புதுக கவிகளை எடுத்து ஆராய்வதில் முயலவில்லை. சிலருக்குக் கம்பருடைய கவிகளில் ஒருவித வெறுப்பு உண்டாயிற்று. அதனாலே, அவர்கள், "இது போலிப் பாட்டு-இதைக் கம்பர் பாடவில்லை-வேறு யாரோ பாடி இராமாயண ஏட்டில் சேர்த்து விட்டார்கள்-இதுவும் ஒரு பாட்டாக இராமாயண புத்தகத்தில் ஏறிவிட்டது" என்று சொல்லுகிறார்கள். இப்போது வெளிப்பட்டிருக்கின்ற-திரு. டி.கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் பதிப்பித்த-'கல்கி' போற்றிப் புகழுகின்ற-இராமாயணமும் இதன் பயனாகவே எழுந்தது எனலாம். நாலு பேர் விமரிசனம் எழுதிய பாட்டுகளை-வெறும்வெள்ளைப்பாட்டுக்களை-மாத்திரம் எடுத்துப் புனைந்து கொண்ட கோவை நூலாகவே இருக்கின்றது அது.

கம்பர் 'கவிகது வந்தவினை' இப்படியிருக்க, கச்சியப்பர்-கந்தபுராணமென்ற 'கவிக்கடலை'த் தந்தவர்-பற்றிய பிரஸ்தாபம் எங்கும் அதிகப்பட்டுக்கொண்டு வருகின்றது. கச்சியப்பரை ஒரு தனிப்பெருங் கவியாகக் கூறுகிறார்கள். கம்பருக்கு ஒரு வழிகாட்டியாக-குருவினைப் போன்று-இருந்தவர் கச்சியப்பர்தான் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

"புவியினுக் கணியாய் ஆன்ற
பொருள் தந்து புலத்திற்றாகி,
அவியகத் துறைகள் தாங்கி,
ஐந்திணை நெறி அளாவி,
சவியுறத் தெளிந்து, தண்ணென்று
ஒழுக்கமும் தழுவிச்சான்றோர்
கவியெனக் கிடந்த கோதாவிரி...."

என்று கூறும் கம்பர் கருதியது கந்தபுராணத்தையே என்பது பலரது அபிப்பிராயம்.

அபிப்பிராயங்களோடு நின்றுவிடாது, கந்தபுராணக் கவிகளை எடுத்து ஆராய்ந்து பார்ப்போம். "இது பொருளாலும் அகலத்தாலும் தமிழ்நூல்கள் யாவற்றினுஞ் சிறந்தது. பெருங் காப்பிய இலக்கணங்கள் யாவும் பொருந்தியது. அறம், பொருள், இன்பம், வீடாகியநான்கையும் விளக்கி அவற்றைப் பெறும் வழியையுஞ் சாதனத்தையுங் காட்டுவது" ஆதலால், எல்லோரும் கந்தபுராணத்தையே போற்றுகிறார்கள். எனது அரிய நண்பர், புரிசை, பெருஞ்சொற் கொண்டல்: திரு. முருகேச முதலியார் அவர்களும் "புலவர்களில் உங்களுக்கு அதிகம் சிறந்தவராகத் தோற்றுபவர் யார்?" என்று கேட்டபொழுது, "கச்சியப்பரே சிறந்தவர்" என்றார். அவர் சும்மா சொல்லிவிட்டுப் போகவில்லை; இலங்கையில "கச்சியப்பர் கவிக் கவின"பற்றிப் பலபிரசங்கங்களும் செய்தார். ரசிகர்கள் அநுபவித்திருப்பார்கள்.

கச்சியப்பர் 'அவையடக்கம்' கூறிவிட்டு, நாட்டின் சிறப்பைக் கூறத் தொடங்குகிறார். நாட்டுக்கு ஆறுதான் "அணி" செய்கிறது என்று ஆற்றினைப்பற்றிக் கூறுகிறார். 'ஆறு' என்று கூறுது 'அணியியல்' என்றது போற்றப்பட வேண்டியது. ஆற்றின் வாழ்வு முற்றாகச் சித்திரிக்கப்படுகின்றது.

"அந்தர மாயவன் றயிறு மாறிபோ
லிந்திர னூர்முகி லியாவு மேகியே
பந்தமில் கடற்புன லருந்தி யார்த்
தெழீஇ
வந்தன வுவரியின் வண்ண மென்
னவே."

இந்திரன் வாகனமாகக் கொண்டு செலுத்துகின்ற முகில்களெல்லாம் (திரும்பி) வருகின்றன. அவை விஷ்ணு மூர்த்தி அறிதுயில் கொள்ளுகின்ற பாற்கடலைப்போல-வெண்ணிறத்தனவாய்ப் பாய்ந்துசென்றன. அங்கே, கடலிலுள்ள நீரைக் குடித்தன. திரும்பி வரும்பொழுது உவர்க்கடலைப் போல-கரியநிறத்தனவாய்-திரும்புகின்றன.

வெண்மை நிறத்தனவாய்ச் சென்ற முகில்கள் கரிய சமுத்திரத்தின் நீரைப் பருகினமையால் கறுத்து-முழங்கிக்கொண்டு வருகின்றன. முழக்கம் நீர் குடிக்குமுன் இல்லை; நீர் குடித்தபின் உண்டான காரியந்தான் அது. மழை வருமுன் சேரும் முகில்கள்தான் முழக்கஞ் செய்வனவல்லவா?

"பார்த்தென துலகடும் பரிதி
யென்னொடும்
போர்த்தொழில் புரிகெனப்பொங்கு
சீற்றத்தால்
வேர்த்தெனப் பனித்துவெள்
ளெயிறு விள்ளக்
கார்த்தென வேதுத் தசனி
கான்றவே"

மேகங்கள், "எமது மண்டலத்தை யழிக்கின்ற சூரியனே! எம்மோடு போர் செய்யவா" என்று சொல்லிப் போர் தொடுத்து, மிகுந்து வருகின்ற கோபத்தினாலே மெய் வேர்த்ததாற் போலத் துமித்து, வெள்ளிய பற்கள் தோன்றச் சிரித்ததாற் போல மின்னலையும், சப்தித்தாற்போல இடியையும் தோற்றுவித்தன. போர்த் தொழில் புரிவதற்காகத் தான் வில்லுப் பிடிக்கின்றன மேகங்கள் என்றது கச்சியப்பர் உவமை. பெருங்கோபத்தினால் மெய் வியர்க்கும்: அந்த வியர்வைதான் மழைத்துமி. சிரிப்பும் வரும்: அந்தச் சிரிப்புத்தான் மின்னல். ஆரவாரிப்பும் எழும்: அந்த ஆரவாரிப்புத்தான் முழக்கம். 'பரிதி' என்றது அண்மை விளியாதலின் இயல்பாயிற்று; சமீபத்தில இருப்பவரை அழைக்கும்பொழுது விளிகள் உரு பெறுவதில்லை.

உவமை கூறுகிறார் - கூறுகிறார்-அவருக்குத் திருப்தியே வரவில்லை; பின்னும் பின்னும் உவமைகளை அடுக்கிக்கொண்டே போகிறார்.

"சுந்தர வயிரவத் தோன்றல்
மீமிசைக்
கந்தடு களிற்றுரி கவைஇய
காட்சிபோன்
முந்துறு சூன்முகில் முழுது
முற்றுற
நந்தியம் பெருவரை மீது
நண்ணிய"

வைரவக் கடவுளது திருமேனி செந்நிறமானது. அந்தச் செந்நிற

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## தவம்

திருமயிலை, திருவாளர்:
சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை.

தவத்தின் பெருமை கந்த புராணத்துள் பல இடங்களிற் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். அப் பாடல்களுட் சிலவற்றைக் கீழே காண்க:—

(1) ஒசிமையொடுக்கு முன்னருலகெலாந் தொலைக்குந் தன்மைப்
போரயினேமிதானும் புராரிதன் வரத்தாற் சென்று
தாரகவசுரன் கண்டந் தன்னை வந்தணுகிச் செம்பொன்
ஆரமதாயிற்றம்மா தவத்தினு மாக்கமுண்டோ

(2) கேட்டலு மதனைச் சீற்றங் கிளர்ந்திட நகைத்து நாதன்
நாட்டமேயுன்னித் தொன்னாட் சதமகன் வேண்டவாழி
மாட்டுறச் செரித்ததனை மலரயன் பதத்தின்காறும்
நீட்டினன் தவமேயன்றி கெடும் பொருள் பிறவுமுண்டோ

(3) ஈற்றினை யிழைத்திட விருக்குங் காலகளைச்
சீற்றமொ டவுணர்கோன் சிறையில் விட்டினுன்
சாற்றிடுமுலகு மேற் றவத்தினுல் வரும்
பேற்றினு முளதுகொல் பெருமைத்தனதே.

(4) பூவுல கண்டமெல்லாம் புரந்திடுஞ் சூரன் தன்னைத்
தீவினையானனென்றே செப்புவர் சிறப்பின் மிக்க
மூவிரு முகத்துவள்ளல் முன்னர் வந்தெதிர்ப்பெற்றான்
ஆவிவன் தவத்திற்கன்றி யறத்திற்கு முதல்வனன்றே

(5) இன்னமு முனிவர் தேவர் யாவரு மினையனென்றே
உன்னருந் தன்மைத்தாகு மொரு தனிக் குமரன் தன்னைத்
தன்னிரு விழியாற் கண்டான் தானவர்க்கிறைவனென்றால்
அன்னவன் தவத்தின் பேற்றை யாரறிந் துரைக்கற்பாலார்

(6) உய்த்திடுகின்றகாலத் தொய்யென வெழுந்து காமர்
புத்தலர் நீபத்தாரான புகர் மழுக் குலிசஞ் சூலஞ்
சத்திவாள் பலகை நேமி தண்டெடு முச்சிலைகோல் கைவேல்
கைத்தலங் கொண்டானென்னினவன் தவங் கணிக்கற்பாற்றோ

(7) ஆடல் வேலெறிதலோடு மாமிர வடிவாயண்ட
கூடமுமனைத்த கள்வனாற்சிறு குறைந்து வீழ்ந்தும்
வீடிலனென்ப மன்னோ மேலைநாள் வரத்தினென்றாற்
பீடுறு தவமேயன்றி வலியது பிறிதொன்றுண்டோ.

(8) தவர்தனின் மிக்க தொன்றில்லை தாவில்சீர்த்
தவத்தினை நேர்வது தானுமில்லையாற்
றவத்தினரிய தொன்றில்லை சாற்றிடிற்
றவத்தனக் கொப்பது தவமதாகுமே.

தவத்திற்குத் தவமே ஒப்புடைத்தென்பது நோக்கத்தக்கது.

## பழக்கம் பெரிது

யாதேனுமொன்றைச் சாதித்தற்கு இன்றியமையாது இயல்பாய் அமைதற்பாலதோர் ஆற்றல் ஒருவனுக்குச் சிறிதேனும் இலதாயினும் பழக்கமானது அவனுக்கு அதனிடத்து முன்னில்லாத அவாவையும் அறிவையும் ஆற்றலையும் முறையே புதுமையிற்றந்து அவனைப் புதுக்கிப் புத்துயிரளிக்கின்றது. அஃது அவனது உடம்பினும உளத்தினும் உயிரினும் அவன் உணராமே ஊடுருவிச்சென்று அவையே தானேயென, அவற்றை அதிகரிக்கச் செய்கின்றது. அதுமுன் அவனுக்குத் துன்புருவாயிற்றென்றை இன்புருவாக்குகின்றது. அதுபற்றி, அவன் அதற்குத் தன் உடல் பொருள் ஆவி மூன்றையுந் தத்தஞ் செய்து அதனால் அதற்கண் அதற்காகவே வாழ்கின்றான். முன்னே அவன் அதனை முற்றும் வெறுத்தானாயினும் பழக்க மிகுதியால் அவன் உணராமலே அது அவனுக்கு இன்றியமையாததாய் விடுகின்றது. மேல் அதனினின்றும் அவனை மீட்டல் அரிதாகின்றது. பழக்கம் நன்றாயிற் பாலையும் மருதமாகின்றது. பாழான இடமும் எழுநிலை மாடமாகின்றது. தீதாயின் அவற்றின் மறுதலையாகின்றது. அந்தோ பழக்கம் எதைத்தான் செய்கின்றிலது. பழக்கம் பெரிது பெரிது.

பழக்கம் தீதாயின் அது தவிரப் பழகுவர் பாற்பட்டார்.

"வைசியமித்திரன்"

## கம்பரை விஞ்சிய கச்சியப்பர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மேனி (கட்டுக் தறியை முரிக்கின்ற) யானைத் தோலால் போர்க்கப்பட்ட தோற்றத்தைப் போல, (முந்தப் பெற்ற) கருவையுடைய மேகங்களெல்லாம் பெரிய சக்கிரமலையின் மேல் எங்கும் பொருந்தப் படிந்தனவாம்.

"வாரை காய்றதித் திலமென
வாலிகண் மபங்கச்
சிரை கான்றிடு தந்திரி நரம்
பெனச் செறிந்த
தாரை கான்றவோ ரிருதுவி
னெல்லையுந் தண்பால்
விரை கான்றிடு தன்மைய
தாமென மேகம்"

'மூங்கில் கக்கிய முத்துக்கள் போல ஆலங்கட்டிகள் பொருந்த நல்ல ஓசையைத் தருகின்ற யாழின் நரம்புபோல நெருங்கிய நீர்த் தாரைகளை-ஒரு பருவகாலம் முடியும்வரையும்-குளிர்மை பொருந்திய பாற்கடலைக் கக்குவதுபோல மேகங்கள் பொழிந்தன' என்கிறார்.

கச்சியப்பர் கண்ட 'தந்திரி நரம்பை' - யாழினை - மழைபெய்வதைக் காணுங்காமகாணவில்லையே? அதைக் 'கவிககண்' தான் காணும்.

(தொடரும்)

## பெரியோரைப் பேணுதல்

தாய், தந்தை, தமையன், உபாத்தியாயன், வித்தியாகுரு, தீக்ஷா குரு, முதியோர் முதலியோரும் அறிவொழுக்கங்களிற் சிறந்தோரும் பெரியோரெனப்படுவர். இவர்கள் சொல்வதை உபதேசமாகக்கொண்டு நடக்கவேண்டியது இளைஞர் கடன்.

இவர்கள் ஆசனத்திலிருக்கும் போது சமமான ஆசனத்திலிருத்தலும் உயர்ந்த ஆசனத்திலிருத்தலும் மரியாதைக் குறைவாகும்.

இவர்கள் வீட்டுக்கு வரின் எதிர்கொண்டு அழைத்து வந்து ஆசனத்திலிருத்தி வணங்கி இன்சொற் கூறி உபசரித்தல் வேண்டும். அவர்கள் போகும்போதும் அவர்களோடு சிறிதுதூரஞ் சென்று வழிவிட்டு உபசாரஞ் செய்யவேண்டும். இவர்கள் முன்பே இரகசியம் பேசுதலும், வீண்சொற் கூறலும், கையுயர்த்திப் பேசுதலும, கை கொட்டுதலும், கைகட்டிப் பேசுதலும் உரத்துப் பேசுதலும் கூடாவாம்.

இவை நமது தரும சாஸ்திர நீதிகள். கொள்ளுவோர் கொள்க.

## தீபாவலி

3-ம் பக்கத் தொடர்ச்சி

கிர சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியை இப்பண்டிகை குறிக்கின்றது தென்பர். பாரதநாட்டை ஹூணர் என்ற அந்நிய சாதியினர் படையெடுத்து வந்து சூறையாடி நாட்டின் செல்வத்தை யெல்லாம் எடுத்துச் செல்வாராயினர். அக்காலத்தில் இந்தியாவின் வடபகுதியை ஆண்டுவந்த விக்கிரமாதித்தன் இவர்களுடைய கொடுமைகளைப் பொறுக்க முடியாமல் இவர்களை நாட்டினின்றும் ஓட்டிவிடத் துணிந்தான். தன்னுடைய நாட்டு மக்களுக்கு வில் வித்தைகளைக் கற்பித்து, ஹூணர்களை நாட்டினின்றும் துரத்திவிட்டான். இங்ஙனம் இவர்களை வென்றி கொண்ட தினத்தையே தீபாவளிப் பண்டிகையாகக் கொண்டாடி வருகின்றனர் என்பர். இவை யாவற்றையும் நோக்குமிடத்து இக்கொண்டாட்டம் வடநாட்டில் குடியேறி, இண்டு ஏற்கெனவேயிருந்ததொரு கொண்டாட்டத்துடன் இரண்டறக்கலந்து கொண்டதுபோலக் காணப்படுகின்றது. இஃதின்னும் ஆராயற்பாலது.

இந் நரகாசுரன் வரலாற்றுக்கும் தீபாவலிப் பண்டிகைக்கும் எவ்வித தொடர்புமில்லையென வாதாடுவாருமுளர். இப்பொருள்பற்றி சுவாமி வேதாசலம் அவர்கள் கூறியிருப்பதும் இண்டு கூறற்பாலது:- தென்றமிழ் நாட்டு மக்கள் கார்த்திகைத் திங்கள் முழுமதிபிறவிலே விளக்குகளை வரிசை வரிசையாக வைத்து அவற்றின் ஒளிவடிவிலே எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளைக் கண்ணாரக் கண்டு வணங்கி வருதல் போலவே, வடநாட்டில் அக்காலத்திருந்த தமிழ் மேன்மக்களும் ஐப்பசித் திங்களில் விளக்கு வரிசை வைத்து அவற்றின் ஒளியிலே விளங்காநின்ற முழுமுதற்கடவுளுக்குத் திருவிழாக் கொண்டாடி வந்தனர். அதுதான் தீபாவலியென வழங்கிவருகின்றது. வடநாட்டவர் தென்னாட்டிற் குடியேறியபின் தீபாவலித் திருநாள் இங்குள்ள தமிழரது கொள்கைக்கும் ஏற்றதாயிருத்தலின், அஃதிங்குள்ள தமிழ் மக்களாலும் கொண்டாடப்பட்டு வருவதாயிற்று. கண்ணன் நரகாசுரனைக் கொன்ற நாளின் நினைவுக்குறியாகத் தீபாவலித் திருநாள் கொண்டாடப்படுவதாயிற்று என்னுங் கதை பிற்காலத்திற் பார்ப்பனர் கட்டிவிட்டதொன்றாகும். பார்ப்பனர் தமது உயிர்க்கொலை வேள்விக்கு உடம்படுத் தமக்குத் துணையாயிருந்த மற்றொரு தமிழ் மன்னனாகிய கண்ணனை ஏவிக் கொலை செய்தனர். இந்நிகழ்ச்சியை மதற்கு முன்னமே தோன்றி நடைபெறவந்த தீபாவலித் திருநாளில் இயைத்து அத்திருநாளின் உயர்ந்த கருத்தை மாற்றிவிட்டதெல்லாம் பார்ப்பனர் செய்த சூழ்ச்சிச் செயலாகும். தீபாவலி என்னுஞ் சொற்றொடர்ப் பொருளை ஆயுங்கால் அத் திருநாளுக்குங் கண்ணன் நரகாசுரனைக் கொன்ற நிகழ்ச்சிக்கும் ஏதோர் இயைபுமில்லாமை தெளியப்படும். தீபாவலி என்பது தீப ஆவலி எனப் பிரிந்து விளக்கு வரிசை என்றே பொருள்தரும். விளக்குவரிசை வைத்து அதன் கண்ணே இறைவனை வழிபடுங் கார்த்திகை விளக்கு விழாவுக்குந் தீபாவலி விழாவுக்கும வேறுபாடு சிறிதுமேயில்லை. ஆதலால், தீபாவலித் திருநாளுக்குப் பார்பபனர் பிற்காலத்தே ஏற்றிவைத்த பொருந்தாக் கதையை மறந்து, அஃது இறைவனை ஒளிவடிவில வழிபடுந் திருநாளாதலைத் தமிழ் மக்களனைவரும் நினைவுகூர்வார்களாக (தமிழர் மதம் - பக் 200-201)

## NOTICE OF SALE

### கோட்டுக் கொம்மிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறையிலுள்ள
யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்
இல. 1643P.

புலோலிகிழக்கு தேவசகாயம் அமிர்தநாதர் வழக்காளி.

எதிராக,

1. புலோலிகிழக்கு சந்தியா ஞானம்
2. ஷை பெண் பிலிப்பாசி
3. ஷை வயித்தி குசைப்பிள்ளை
4. ஷை வயித்தி மரியாம்பிள்ளை
5. ஷை மரியாம்பிள்ளை ரணசிலெஸ்
6. T. எலியாசுவும் பெண்
7. மேரியாப்பிள்ளையும்
8. தம்பனை S. M. J. Fernando
9. புலோலிகிழக்கு பிறன்சிப்பிள்ளை தேவசகாயம்
10. ஷை பிறன்சிப்பிள்ளை தொம்மை
11. ஷை அலெக்சாண்டர் பிரிஸ்
12. ஷைமரியாம்பிள்ளைமகள் அருளம்மா
13. ஷைமரியாம்பிள்ளைமகள் ஞானத்தம்மா
14. ஷைபெரிசுப்பிள்ளைசுவாமப்பிள்ளை
15. தம்பனை அவரும்பிள்ளை கைம்பெண் அன்னம்மா எதிரிகள்.

மேற்கூறிய இலக்கப் பிறிவிடல் வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொம்மிசன் அதிகாரப்படியும் இதன்பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் குறித்த காணியிடமாக விருந்து கொம்மிசனர் புலோலிமேற்கு கு. வேலாயுதர் நாகலிங்கம் ஆகிய என்னால் மதிப்புத் தொகையிலிருந்து முதலாவதாகப் பங்காளருக்கிடையிலும் அவர்கள் கேட்கத் தவறினால் உடனே அந்த விடத்திலும் 1943ம் ஆண்டு மார்கழி௴ 16ந்உ வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனம் வருமாறு

புலோலி கிழக்கு வென்றிபாகு தேவன் குறிச்சியிறை செம்பிளாவோடையும் எடுத்துக்கொண்ட தொட்டு இதற்கு 1942ம் ஆ ஆடி௴ 29ந் திகதி 681ம் இலக்கத்தல் உலாந்தாமேன்தர் M. வேலுப்பிள்ளையால் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நில. பர. 3 குளி $7\frac{1}{3}\frac{3}{2}$ வீடுகளும் A B C D E F G H I J அதற்குட்பட்டவை களுக்கும் எல்லை கிழக்குஒழுங்கை, வடக்கு St.தோமாஸ் சேட்சு, மேற்குமரியாம்பிள்ளை வினப்புயுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு வளக்காளிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது அடங்கலும்.

எனது மதிப்பு

A காணியும் தென்னம் பிள்ளைகளும் பனையும் மதிப்பு ரூபா 930—
B வீடு கொட்டில்களின் மதிப்பு ரூபா 350—
முழுத்தொகைமதிப்பு ரூபா 1280—

கு. வே. நாகலிங்கம்,
புலோலிமேற்கு, கொம்மிசனர்.
1943ம் ஆ ஐப்பசி௴ 25ந்உ
(Mis 194 4-11-43)


## பல் வைத்தியம்

### யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திரூ அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

### குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது,

(Mis. 93. 5.8—31.12.43)


நரகசதுர்த்தி என்னுமிடத்து நரகனென்னுஞ் சொல் அப்பெயருடையானோர் அசுரனையும், இயமலோகத்திலுள்ளாரையும் குறிக்கும். இவ்விரண்டு காரணத்தாலும் அப்பெயர் உண்டாயிற்றெனக் கொள்க என எம் ஆசிரியர் சிவக் கருணாலய பாண்டியப் புலவர் கூறினார்கள். (வரும்)

# உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

மாக வல்லவா வந்து சேரும், என்று நான் பலவாறு மறுத்துச் சொன்னேன்; அதற்குக் கந்தாம்மான் "தம்பி, உம்முடைய பிள்ளைக்கு இப்பொழுது யாரோ ஒருத்தியைத் துணையாக வீட்டில் வைத்திருக்கிறேனென்று சொல்லுகிறீர்; இப்படிப்பட்ட பெண் நன்மை தீமைக்கு உதவுமா? இவர்கள் கூலிக்கு மாரடிக்க வந்தவர்களாவரே, நீர் இரண்டாந்தாரமாக ஒரு பெண்ணை யெடுத்துக்கொண்டால் அப்படி வருபவள் உமது மகளுக்குத் தாய்க்குத் தாயாகவிருந்து உம்முடைய பிள்ளையைப் பாதுகாப்பாள்; அல்லாமலும் உமது மகள் மணம் முடித்த பிறகு சிறியதாயென்ற முறையில் அவள்தானே கொண்டாடவேண்டி வரும்" என்று இப்படிப் பல காரணங்களைச் சொன்னார். அம்மான், நீங்கள் வேறு எதனை வேணுமென்றாலுங் கேளுங்கள், செய்கிறேன்; இந்த ஒரு கேள்வியை மாத்திரம் கேளாதீர்கள், கல்யாணஞ் செய்யக் கனவிலும் உடன்படமாட்டேன்; என் பிள்ளைக்கு இச்செயல் விருப்பமாகவிராது என்று சொல்லி நான் மறுத்தேன்; "ஏதோ சொல்லவேண்டியதைச் சொன்னேன், இனி உமது இஷ்டம் தம்பி, ஆனல் உமது மகளுடைய கருமத்தை நான் முன் சொல்லியபடி என்னுல் இயன்றவரையிற் பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு அவர் என்னிடம் விடைபெற்றுக்கொண்டு போயினர். மகளே, புவனம், நானும் கந்தாம்மானும் பேசும்போது என்னை மறந்து நான் சற்று உரமாக நியாயம் பேசிவிட்டேன்; அந்த நேரத்தில் என் பிள்ளை நானும் அவரும் ஏதோ பேச்சுப்படுகிறோமென்று எண்ணிக்கொண்டு தலைவாசலிற்கு அடுத்தவுள்ள அறையில் வந்து நின்று நாங்கள் இருவரும் பேசிய நியாயங்களைக்கேட்டு விட்டாள்; நான் இரண்டாமுறை விவாகஞ் செய்வதற்குத் தான்தான் தடையென்று என் பிள்ளை விளங்கிவிட்டாள்; என்னுலல்லவோ என் தகப்பனர் கஷ்டப்படுகிருரென்று என் அருமையான மகள் எண்ணிவிட்டாள; அன்றிரவு எனக்கு உணவு பரிமாறும்போது என் பிள்ளை வாடிய முகத்தோடு இருப்பக்கண்டு நான் மனம் பதைத்து "கண்ணே, உனக்கு என்னடியம்மா கவலை; ஏன் இன்று முகவாட்டமாயிருக்கிருய்" என்று உண்பதையும விடுத்து ஆவலுடன் வினவினேன்; "எனக்கு ஒரு கவலையுமில்லை ஐயா, நீங்கள் போசனஞ் செய்யுங்களென்று என் பிள்ளை என்னைத் தேற்றி உண்ணச் செய்தாள்; நான் போசனம் முடித்துக்கொண்டு என் முன்னிலையிலேயே என் மகளையும் போசனஞ் செய்யச்சொல்ல அப்படியே செய்யும்போது, மகளைப் பார்த்து "என் செல்வமே, சற்று முன்னர் நீ முகவாட்டத்தோடு இருந்ததமக்குக் காரணம் அறிந்தாலல்லாமல் என் மனம் ஆருது; எனக்கு உறக்கம் வராது, ஒளியாமல் உள்ளதைச் சொல்லம்மா என்று பரிவுடன் கேட்டேன்; "எனக்கு ஒரு மனவருத்தமும் இல்லை ஐயா, என்னையிட்டு நீங்கள் கவலைப்படாதீர்கள்; சொல்லுகிறேனென்று குறைபெண்ணுதீர்கள்; அந்தக் கந்தாம்மான் சொன்ன பிரகாரம் நீங்கள் செய்தால் நல்லதென்று நினைக்கிறேன்; ஐயா, எத்தனை நாளைக்கு எனக்கு உற்றபெண் தமர் ஒருவரில்லாமல் நான் காலங்கழிப்பது? நீங்கள் நினைத்திருக்கிறபடி நாளைக்கு என்னை ஒருவர் கையில் ஒப்புவிக்கவேண்டி வந்தாலும், புகுந்த வீட்டிலுள்ளவர்கள் இவள் இனஞ்சனமற்ற ஏழை யென்று சொல்லி என்னை ஏளனஞ் செய்வார்களே; இவைகளையிட்டுத்தான் ஐயா கவலைப்பட்டேன்" என்று நான் பெற்றவள் எனக்குச் சொன்னாள்; குழந்தாய், புவனம், நீதான் என்மகள், என்மகள்தான் நீ என்று நினைத்துக்கொள்; என் பிள்ளை சொன்ன சொல்லைக் கேட்டபோது நான் திடுக்கிட்டேன்; என் மனம் பதறியது, சரீரம் நடுங்கியது; என்ன பதில் சொல்வதென்று தெரியாமற் சிறிதுநேரம் சும்மாவிருந்தேன்; கண் கலங்கியது, அதை என்பிள்ளை கண்டாற் போசனஞ் செய்வதையும் இடையில் விடுத்துக் கவலைப்படுவாளென்று பயந்து அவளறியாதபடி என் கண்ணீரைத் துடைத்துவிட்டு, மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, அதற்கென்ன மகளே எல்லாம் யோசிப்போம் நீ போசனம் முடித்துவிட்டுவா என்று சொல்லி மெல்ல அந்த இடத்தைவிட்டுத் தலைவாசற் பக்கமாக எழுந்து போயிருந்து யோசிக்கத் தொடங்கினேன். இதற்கிடையில் தான் சொன்னதையிட்டு நான் கவலைப்படுவேனே என்ற அச்சத்தினுல் என் மகளும் போசனம் முடித்துக்கொண்டு தலைவாசற்பக்கம் வந்து என்னருகில் விநயமாக நின்ருள். நான் மனம் வருந்த என் பிள்ளை மனஞ் சகியாள்; அவள் வருந்தினுல் நான் மனம் பொறுக்கமாட்டேன்.

### "எண்ணுத எண்ணி மனம் புண்ணுனேன்"

"ஐயா, நான் சொன்னதையிட்டுக் கவலைப்படுகிறீர்களா? எனக்கு எக்காலத்தும் ஒரு பெருந்துணையாக விருக்குமென்றுதான் ஐயா, நான் அப்படி உங்களைக் கேட்டேன்; என்று சொல்லி என்பிள்ளை அதன்மேலும் ஏதோ சொல்லவாயுன்னிவிட்டுப் பின்னர் யாதும் பேசாமல் நின்ருள். "பிள்ளைக்கலி தீர்கப் பிறந்த எங்கள் செல்வமே; நான் உன்மேற் குறை நினைத்தால், உன்னைக் கோபித்தால், உன் மனத்தை வருந்த வைத்தால், என்னைவிட உன குறையைப் பொறுத்துக்கொள்ள உன்னை ஆற்றித்தேற்ற, உன் கவலையை மாற்ற வேறு யாரடியம்மா இருக்கிருர்கள்; நீ கலங்கவேண்டாம் கண்ணே, உன் புத்தியிற் புலப்பட்டதை நீ எனக்குச் சொன்னுப்; உன்னைப்பெற்றவள் இப்பொழுதும் உயிரோடிருந்தால் நீ இப்பு யெல்லாஞ் சொலல நேராது; என் செய்யலாம் மகளே என் விதியும் உன் கதியும் இப்படியாயின; கண்ணே, சொல்லுகிறேனென்று கவலைப்படாதே; இரண்டாந்தாரத்தில் நான் இனிப் புகுந்தால் அது உனக்கு மெனக்கும இம்மையிலும் வந்துசேரும்; நீயோ சிறுபிள்ளை; உலகத்தின போக்கை யறியாய்; அதனை அறிவதற்கு உனக்கு அநுபவம் வேண்டும்; வயசு ஏறவேண்டும்; உனக்குப் புகுந்த வீட்டத்திலே பெண்துணை யில்லையே யென்று கவலைப்படாதே; என் பிள்ளையென்று நான் உன்னை மெச்சிப் பேசவில்லை; நீயொரு தக்க குடும்பத்திலே புகுந்தால், அந்தப் புகுந்த வீட்டிலும் உன்னையெல்லாரும அருமை பாராட்டி உன்மீது அன்பு பாராட்டி நடப்பார்களென்பது எனக்குத் தெரியும். தன் தாரம் இறந்துவிட, அவன் இரண்டாந்தாரத்தைத் தேடிக்கொள்ள, அப்படி இரண்டாந்தாரமாக வந்தவள், அவனுடைய முதற்றாரத்துப் பிள்ளைகளைச் சிறுமைப்படுத்த இம்சிக்க, அதனுல் அந்தப் பிள்ளைகள் துன்பப்பட, அதனையறிந்த தகப்பனுக்கும் அவனுடைய இரண்டாந்தாரத்திற்கும் நித்திய பிணக்குண்டாக, அதனுல் அந்தக் குடும்பம் குலைந்ததைப் பல சந்தர்ப்பங்களில் நான் அறிவேன்; அல்லாமலும் மகளே உனக்காகத்தான் நான் இங்கே இருக்கிறேன்; உன்னை பொருந்தக்க குடும்பத்திற் சேர்த்துவிட்டால், பிறது எனக்கென்ன குறை, என்ன கவலை, நான் என் ஆன்ம ஈடேற்றத்தின்பொருட்டு தலயாத்திரை செய்தும் தெய்வத்தை வழிபட்டும் நல்ல நூல்களைப் படித்தும் சற்சங்கங்களைச் செய்தும் ஆநந்தமாகக் காலங்கழிப்பேனடியம்மா; இவைதான் என்னுடைய பிரதான நோக்கங்கள்; ஆனதால் என்னையிட்டுக் கவலைப்படவேண்டாம் நான் பெற்ற கண்ணே" என்று என் பிள்ளைக்கு ஆதரவுடன் சமாதானஞ்சொன்னேன்; நான் சொன்னவைகளை யெல்லாம் என் மகள் அவதானமாகக் கேட்டாளெனினும் அவள் மனம் சாந்தியடையவில்லை யென்பதைக் குறிப்பாலுணர்ந்தேன்; பின்னரும் நான் என் மகளைப் பார்த்து, ஏனடியம்மா நான் எத்தனை சொன்னாலும் சமாதானப்படாமல் மேலும் மேலுங் கலங்குகிருப் என்று கேட்க, என்பிள்ளை விரிட்டுக்கதறி "ஐயா, என்னைப் பெற்றதாயும் சின்னவயசிலே யென்னைப் பிரிந்து போய்விட, உங்களையே தந்தையும் தாயுமென்று நான் நம்பியிருக்க, என்னை எங்கேனும் கொண்டுபோய்ப் புகுத்தியபின் நீங்களுமா கைவிட்டுப்போக உத்தேசித்திருக்கிறீர்கள்; அப்படி என்னைவிட்டு நீங்கள் பிரிந்து பரதேசம்போனுல் எனக்கு ஆர் தஞ்சம்...." என்று என்பிள்ளை அழுதழுது சொல்ல, மனஞ்சகியாமல் நானும் அழுதுகொண்டு "என் செல்வமே, நான் புத்தியீனமாய் அப்படிச் சொல்லிவிட்டேன்; உன்னைவிட்டு நான் எங்கும் போகமாட்டேன்; நீ சொன்னபடி யெல்லாஞ் செய்கிறேன்; அழாதேயம்மா" என்று பலவாறு சொல்ல என் பிள்ளையும் ஒருவாறு தேறினுள். அப்படித் தேற்றி என் பிள்ளையைத் தன் அறையுட்போய்ப் படுக்கச் செய்துவிட்டு, நானும் என் படுக்கைக்குப் போனேன்; படுத்தேனுயினும் அன்றிரவு முழுவதும் எனக்கு உறக்கமே வரவில்லை; எண்ணுத எண்ணமெல்லா மெண்ணி எண்ணி என்மனம் புண்ணுனேன்"

(வரும்)

# கல்கத்தாவிற் பட்டினி மரணங்கள்

கல்கத்தா நவ 1—சனிக்கிழமையன்று ஆஸ்பத்திரிகளில் கொண்டு சேர்க்கப்பட்ட 198 பட்டினிப் பிணியாளர்களில் 91 பேர் மரணமடைந்தனர். இத்தொகையையும் சேர்த்தால் கடந்த வாரத்தில் மட்டும் ஆஸ்பத்திரிகளில் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்ட 1320 பசிப்பிணியாளர்களில் 609 பேர்கள் மரணமடைந்திருக்கின்றனர்.

# உலகம் பலவிதக் கதையைப்பற்றிய அபிப்பிராயம்

"அமிர்தம்" சோழம்பு

"சென்ற வியாழக்கிழமை (14.10.43)ல் வெளிவந்த சாதனத்தில் உலகம் பலவிதம் மிகவும் அருமையாகவிருந்தது. ..........கண்ணீர் சொரிய வாசித்தேன். தாங்கள் எத்தனையோ கற்பனைக் கதைகள் எழுதியுள்ளீர்கள். ஆனல் இக்கதையைப்போல பெண்மணிகள் அத்தியாவசியம் அறிந்திருக்க வேண்டிய விதிகள் பழக்க வழக்கங்கள், ஒழுகவேண்டிய முறைகள் வேறு எக்கதைகளிலும் பொதிந்து கிடக்கவில்லை...",

# புழுக்கந்தந்த புதுக்கவி

சி. ஆறுமுகம்
(அண்ணுமலைப் பல்கலைக்கழகம்)

பங்குனி மாதமும் வந்தது. பருவப் பரீட்சையும் நெருங்கி விட்டது. பாடஆபத்தத்துக்கும் விட்டிருக்கிறார்கள். எங்கே? கலாசாலை மாணவர்கள் அறைதின்மையும் ஓர் அறைபிற்ருன். காற்றோ தசையவில்லை. வெயிலோ பொறுக்க முடியாது. புழுக்கத்தைப பற்றிச் சொல்லவேண்டியதில்லை. என் செய்வது? படிப்பதா? படுப்பதா? படிக்க விடுவார்களா! மேற்திகாரிகளின் மேற்பார்வைக்காலம். போதும் ஆசிரிய கலாசாலை வாழ்க்கை. நண்பர்களுட் சிலர் நிறுக்கத் தொடங்கிவிட்டார்கள். சிலர் மேசையோடு பொருதுகின்றனர் இன்னுஞ்சிலர் புத்தகங்களுக்கு முத்தம் கொடுக்கின்றனர்; நானுந்தான். இந்நிகழ்ச்சிகளுக்கெல்லாம் மேற்பார்வையாசிரியரும் மேடையிற்ருன் இருக்கிருர். அன்னுரின் அகன்றுயர்ந்த நெற்றி, கருணைபொழி விழிகள், புன்முறுவல் தவழும்வாய், தன்னை பாசத்தின்மீது காதல்கொண்ட நெஞ்சம் அனைத்தும் என் நெஞ்சை அள்ளுகின்றன. பாவ! நான்குமுழவேட்டி அரையில், பழைய மேலங்கி (கோற்) ஒன்ருே இரண்டோதானுண்டு. அவற்றுளொன்று தரித்திருக்கிருர். மிகப்பழைய அந்த வஸ்திரமுங் கூடத்தான். அப்பெருமகன் எங்கள் நிலையை உணர்ந்துகொண்டேயிருக்கிருர். எங்கள் பாடு பெரும்பாடு. நெருப்பிலிட்ட புழுப்போலத் துடிக்கிறோம். திடீரென எழுந்தார். பக்கத்திருந்த மாணவனிடன் வெண்கட்டித் துண்டொன்று பெற்றுக்கொண்டார். கை கரும்பலகையைக் கிட்டியது. எல்லோரும் எழுந்துவிட்டோம். கரும்பலகையைக் கிட்டினேம். கூர்ந்து அவதானித்தோம். இரண்டு வரிகள் காட்சி தந்தன. மௌனமாக வாசித்தோம்.

"தாக்குற்ற வெவ்வெயிலிற் சார்வயலிற்றுமுழைத்தே
போக்கற் றுதிர்செற் பொறுக்குவார்-போக்கிற்றே"

என எழுதப்பட்டிருந்தது. திகைப்படைந்தோமெனினும் என்? அஃது அவருக்குப் பிறவிக் கொடைதானே. பின்னர் அப்புலவர் பெருமகன் எங்களைப் பார்த்து மிகுதியை நிரப்பும்படி கூறினர். நாங்களா நிரப்பத் தகுதியுடையவர்கள்! ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா? எஞ்சிய பகுதியையும் அவரே நிரப்பி விட்டார்.

"கூடி மனமுருகி யுள்ளங் குழைந்தலுத்துப்
பாடம் படிப்பார்தம் பண்பு"

ஆகா! என்ன அடுக்கு! உவமைப் பொருத்தத்தை என்னென்பேன். இயற்கைப் புலமையின் சிகரம். நாலடியையும் சேர்த்து மனமார வாசித்தோம். வாசித்துப் பாருங்கள்.

"தாக்குற்ற வெவ்வெயிலிற்சார்வயலிற்
றுமுழைத்தே
போக்கற் றுதிர்செற் பொறுக்குவார்-
போக்கிற்றே
கூடி மனமுருகி யுள்ளங் குழைந்
தலுத்துப்
பாடம் படிப்பார் தம் பண்பு"

இப்புலவர் பெருமகன் எம்குரு. கற்பனைக் களஞ்சியம். மறைந்த கவி ம. வே. மகாலிங்கசிவம் அவர்கள் வாராது போய் வந்த மாமணியல்லவா! நம் புலவ சிகாமணியைத் தமிழன்னை மீண்டும் எப்போது தோற்றுவிப்பாளோ!

## விவாகம்

கனகரத்தினம்—பாக்கியம்

நிகழும் சுபானு வருஷம் ஐப்பசி மாசம் கஅ-ந் திகதி சனிக்கிழமை இரவு 1 மணியளவில்நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் நல்லூர் திரு. சப்பந்தர் அவர்களின் ஏகபுத்திரன் திருவளர் செல்வன்: கனகரத்தினம் அவர்கட்கும் ஷெ யூர் திரு. பெரியதம்பி அவர்களின் சிரேஷ்டபுத்திரி திருவளர் செல்வி: பாக்கியத்திற்கும் மணமகளில்லத்திற்றின விவாகம் விதிப்படி சிறப்புறநிறைவேறியது. தம்பதிகள் சகல ஐஸ்வரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் இறைவன் திருவருள் புரிவாராக,

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

## வியாழன் நவ 4

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 இ எம் அப்துல் ரஹ்மான்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 தஞ்சாவூர் சீதாலக்ஷ்மி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி கே கோவிந்தராஜுலு நாயுடு புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கல்விஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 டி கே கோவிந்தராஜுலு நாயுடு புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 தஞ்சாவூர் சீதாலக்ஷ்மிபாட்டு 6 30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7 35 தமிழில் செய்திகள் 7-45 தஞ்சாவூர் பாலகிருஷ்ண பிள்ளை பாட்டு 9 சக்ரம் இசைச்சித்திரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45வெற்றிக்கு சேமித்தல் பேச்சு 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

## வெள்ளி நவ 5

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 காலைகீதம்† 8-15 ஆங்கிலத்தில்செய்திகள் 8-30 பி தாவுத் மியான் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் †1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி தாவுத் மியான் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 ஸி எஸ் கிருஷ்ணையர்பாட்டு 5-40 தாரா-ஷரீப் 6 செம்பொன்னார் கோயில் ஆர் கோவிந்தசாமி பிள்ளை சகோதரர்கள் நாதஸ்வரம் 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய ரசகம் 7-30 அறிவிப்புகள் 7-35தமிழில் செய்திகள் 7-45 பாடுங்கள் தோழியரே இசைநாடகம் 8 செம்பொன்னார் கோயில் ஆர் கோவிந்தசாமிபிள்ளை சகோதரர்கள் நாதஸ்வரம் 8-45 ஸி எஸ் கிருஷ்ணையர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 உலக விவகாரங்கள் 10 திரைகானம் † 10-20 முப்டாஜ் ஷாந்த்† 10-30 முடிவு.

## சனி நவ 6

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழ்செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8–30 வேதாரண்யம் எஸ் கிருஷ்ணமூர்த்திஐயர் வயலின் 9 முடிவு.

1 ஏ விஜயம்மா பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 தேர்ந்த மெட்டுகள்† 2 தமிழில்செய்திகள் 2-05 வேதாரண்யம் எஸ் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 2.30 முடிவு.

மாலை 5 ஏவி ஐயம்மா பாட்டு 5-40 திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் விளக்கம் 6 திரைக் கதம்பம்† 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 முறைமைக்கலை பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35தமிழில்செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி (அரியக்குடி ராமானுஜஐயங்கார் பாட்டு 9-15 மோதிபாய்† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 தாக்கப்பாட்டுகள் 10 இசைவேளை† 10-30 முடிவு.

## ஞாயிறு நவ 7

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழ்செய்திகள் 8 ஜி சாரங்கபாணி செட்டியார், டி ஜி சக்கரகோபாலன் குரல், குழல் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எம் கே கனகாம்பாள் வீணை 9 முடிவு.

12 பத்திமான் பலவான்† 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சாட்டியகுடி ஆர் மீனாக்ஷிசுந்தரம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இசைக்கதம்பம்† 2-30 முடிவு.

மாலை 5 சாட்டியக்குடி ஆர் மீனாக்ஷிசுந்தரம் பாட்டு 5-40 தேவாராதனை 6 எம் கே கனகாம்பாள்பாட்டு 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 கட்டுப்பாடு திட்டங்கள் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கே எஸ் வெங்கடராமய்யா வயலின் 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30லண்டனிலிருந்து செய்திகள் 9-45 வக்கர ராகங்கள் 10 இசை வேளை† 10-30 முடிவு.

## திங்கள் நவ 8

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழ்செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி எம் சுப்பிரமணியன் நாதஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம்† 1-30ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே ஸி காளிதாஸ் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 டி எம் சுப்ரமணியன் பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6 ராமநாதபுரம் எம் என் கணேசபிள்ளை நாதஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வாஜேஸ் வாத்திய கோஷ்டி 8 செம்மை வைத்தியநாதபாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 இந்தியாவும் நான்கு சுதந்திரங்களும் விவாதம் 10-05 இசைப்பாட்டுகள்† 10-30 முடிவு.

# யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்கம்

இச் சங்கத்தின் வருடாந்த விழா 23-10-43 சனிக்கிழமை பிற்பகல் 4½ மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில், இளைப்பாறிய வித்தியாதரிசி ஸ்ரீ மு. தம்பிப்பிள்ளை அவர்களுக்கு ஷை சங்கத்தார் நடாத்திய பிரியாவிடையின் பின் நடைபெற்றது.

பண்டிதர் ஸ்ரீ A. யோசேப்பு அவர்கள் தலைமைவகித்தார். கூட்டம் ஆரம்பமானதும் தமிழ்ப் பிரதம வித்தியாதரிசி ஸ்ரீ வே. கதிரவேலு அவர்கள் "யுத்தநிதிச் சேமிப்புவாரம்" பற்றிச் சபையோருக்கு விளக்கி ஆவனசெய்யுமாறுவேண்டினர். பின்னர் வருடாந்தக் கூட்ட வாலாறும் அறிக்கையும் காரியதரிசி அவர்களால் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

தனாதிகாரியின் அறிக்கையும் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டபின்:- "பட்டினப்பகுதியில் பஞ்சம் அதிகமாயிருப்பதால் நகரசங்க எல்லையுட்பட்ட பாடசாலைகளில்உள்ள பிள்ளைகளுக்கு உணவு அவசியம். அரசினர் இதற்கெனக் கொடுக்கும் பணத்தோடு நகரசங்கமும் தான் கொடுக்கவேண்டிய பகுதியைக் கொடுத்து பஞ்சத்தால் வாடும் மக்களுக்கு மத்தியானப் போசனம் அளிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யுமாறு யா. த. ஆ. சங்கம் நகரசங்கத்தை வேண்டுகின்றது" என்ற பிரேரணை சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது. அதன்பின் புதவருட உத்தியோகஸ்தர் மேல்வருமாறு தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பண்டிதர்: ஸ்ரீ A.யோசேப்பு அவர்கள், உபதலைவர்கள்: ஸ்ரீமான்கள்: A. வெற்றிவேற்பிள்ளை, P. S. ஞானப்பிரகாசம் என்னுமிருவர், காரியதரிசி: ஸ்ரீ நா. தப்பிரத்தினம், உபகாரியதரிசி: ஸ்ரீ T. கனகரத்தினம், தனாதிகாரி: ஸ்ரீ E.குமாரசுவாமி, உபதனாதிகாரி: ஸ்ரீ J. ஞேமான், கணக்குப் பரிசோதகர் ஸ்ரீ. E. கேதீஸ்வரநாதன், நிர்வாகசபையோர் ஸ்ரீமான்கள்: K. முத்துக்குமாரசுவாமி, E. P. குமாரசுவாமி, K. தருமலிங்கம், T. S. தியாகராஜஐயர், N. சேதுபதி, N. சுப்பையபிள்ளை, S.K.S. அன்றாஸ், K. குமாரசுவாமி, A. இளையதம்பி, S. ஞானப்பிரகாசம், A. திரவியம், S. இராசையா என்பவர்களாவர். கூட்டம் 6-30 மணியளவில் இனிது நிறைவேறியது.

—கடித.

# இலங்கைச் சித்த வைத்திய சங்கம்

இச்சங்கத்தின் பொதுக்கூட்டம் கடந்த சுபானு௵ புரட்டாதி௴ 30ந் திகதி (16-10-43) 3½ மணியளவில், வண்ணார்பண்ணை சேணியதெரு சன்மார்க்க போதனு தவிபாஷா பாடசாலை மண்டபத்தில் இச்சங்கத்தின் உபதலைவர்களுள் ஒருவராகிய டாக்டர். வெ. சி. இராமநாதன் எல். ஐ. எம். அவர்களின் தலைமையின்கீழ் கூடப்பெற்றது.

அத்தருணம் கீழ்வரும் தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

### முதலாவது தீர்மானம்

கொழும்பு சுதேச வைத்திய கல்லூரியில் சித்தவைத்திய ஆசிரியர்களாக விருப்பவர்களுக்கு, சித்த வைத்தியத்தில் அனுபவமோ அன்றேல் சித்தவைத்திய அறிவோ இல்லாதிருப்பதால், அவ்வகை ஆசிரியர்களால் அங்குசித்தவைத்தியம்தகுந்த முறையில்கற்பிப்பதற்கு ஏது இல்லாதிருக்கின்றது. ஆனதினிமித்தம், அக்கல்லூரியில் சித்தவைத்திய வகுப்பைக் கீழ்வரும் முறைகளில் திருத்தி அமைக்குமாறு இச்சங்கமானது சுதேச வைத்திய ஆலோசனைச்சபையின்அதிபர் அவர்களையும்,கௌரவசுகாதாரமந்திரிஅவர்களையும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றது.

1 சித்த வைத்தியத்தில் தகுந்தவாறு கல்வி கற்றுத் தேறி அனுபவம்பெற்ற வைத்தியர்களைச் சுதேச வைத்தியக் கல்லூரியில் சித்தவைத்திய ஆசிரியர்களாகவும், அத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரியில் சித்தவைத்தியர்களாகவும் நியமித்தல்.

2 சித்த வைத்தியத்தில் விசேடமாகச் சில ரோகங்களுக்குச் சிகிச்சை செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த தமிழ் வைத்தியர்களை அக்கல்லூரியின் சித்த வைத்திய வகுப்பு விசேடபாட ஆசிரியர்களாகவும், அதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரியில் அவ்விசேட ரோகங்களுக்குச் சிகிச்சை செய்யும் சித்தவைத்தியர்களாகவும் நியமித்தல்.

3 அக்கல்லூரியில் தகுந்த முறையில் சித்தவைத்தியத்தைப் போதிப்பதற்கு ஏற்றவாறு தகுந்தமுறையில் சித்தவைத்திய வகுப்புப்பாடத் திட்டத்தை அமைத்து அத்துடன் யாழ்ப்பாணத்தில் விசேடமாகக் கையாண்டுவரும் தமிழ் வைத்திய முறையையும் சேர்த்து இணைத்தல்.

4 தற்பொழுது சுதேசவைத்திய கல்லூரியுடன் இணைக்கப்பட்டிருக்கும் சித்த வைத்திய ஔடத பாகசாலையை விருத்தியாக்கி அங்கு பலவகைச் சித்த வைத்திய மருந்துகளும் பாகஞ் செய்வதற்கு ஏற்பாடு செய்தல் முதலியன.

### இரண்டாவது தீர்மானம்

சுதேச வைத்திய ஆலோசனைச் சபையானது சித்த வைத்தியர்களைப் பதிவு செய்யும்பொழுது, இச்சங்கத்தின் நிர்வாகசபையின் வேண்டுகோட்களையும் அங்கீகரித்து, சித்தவைத்தியர்களைப் பிறம்பான தனிடாப்பில் பதிவுசெய்யுமாறு இச் சங்கமானது சுதேசவைத்திய ஆலோசனைச் சபையின் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றது.

### மூன்றாவது தீர்மானம்

விசேடமாகச் சித்த வைத்தியத்தில் தகுந்த மருந்துகள் மேகரோகங்களுக்கிருப்பதால் தற்பொழுது சுதேசவைத்தியர்கள், தேசாதிபதியின் விசேட உத்தரவுபெறாமல் மேகரோகங்களுக்குச்சிகிச்சை செய்தல் கூடாது என்றிருக்கும் சட்டத்தை ரத்துச் செய்து விடுமாறு இச்சங்கமானது கௌரவ சுகாதார மந்திரி அவர்களைக் கேட்டுக் கொள்கின்றது.

### நான்காவது தீர்மானம்

சுதேச வைத்திய ஆலோசனையில் தற்பொழுது சித்த வைத்திய பிரதிநிதியாக ஒரு வைத்தியர்தான் நியமிக்கப்பட்டிருப்பதால், இனிமேல் குறைந்தது மூன்று சித்த வைத்தியர்களையாவது நியமித்து, சித்தவைத்தியர்களின் பிரதிநிதிகளை பிரதிநிதித்துவ முடையவர்களாய், இச்சங்கத்தின் ஆலோசனைக்கிணங்க நியமிக்குமாறு இச்சங்கமானது கௌரவ சுகாதார மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கின்றது.

ஐந்தாவதாக மேற்கூறியவாறு நிர்மானித்த நிர்ணயங்களைச் சுதேச வைத்திய ஆலோசனைச் சபையின் அதிபர் அவர்கட்கும், கௌரவ சுகாதார மந்திரி அவர்கட்கும் எடுத்து விபரமாகக் காட்டுவதற்கு கீழ்வரும் சித்த வைத்தியர்களுக்கு இச்சங்கமானது அதிகாரமளித்திருக்கின்றது.

டாக்டர் (ஆயுர்) வெ. சி. இராமநாதன் எல். ஐ. எம், டாக்டர். (ஆயுர்) த. பூலோகசுந்தரம் எல் ஐ எம், டாக்டர் அ. இராசநாயகம் எல். ஐ. எம், வைத்தியர் வ. சி, இராசையா, வைத்தியர் பெ ச. இராமலிங்கம், வைத்தியர் வி. கனகசபை, வைத்தியர் சு. சுந்தரம்பிள்ளை, வைத்தியர் வ. குமாரசாமி, வைத்தியர் எம். முகமத் அசீஸ், டாக்டர் ஆ. நடராசா, டி. ஐ.எம். எஸ்,டாக்டர் சோ.மு. பொன்னையா எல். ஐ. எம்.

பொதுக்காரியதரிசி


# அறிவித்தல்

குழந்தைகளுக்குக் காத்திராப்பிரகாரம் உண்டாகும் மாந்தம், இருமல், கிரந்தி காய்ச்சல் ஆகிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற மருந்துகள் எம்மிடம் ஏராளமாயுண்டு.

குளிர்சுரம்(மலேரியா) இருமல், உஷ்ணச்சூடு, வாதம்,கிரந்தி, நரம்புப் பெலவீனம், மடு ஆகிய நோய்களைத் தீர்க்கும் கீழ்க்கண்ட மருந்துகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அயக்குழம்பு, சென்னகரம்பழநெய், காந்தபஸ்பம் வெள்ளைகுப்பஸ்பம், அமுதசர்க்கரை, கிரந்திக்குளிகை, பெருங்கிரந்தி எண்ணெய், கோட்டைச்சந்தனாதி எண்ணெய், மகாசஞ்சீவி மாத்திரை, கோரோசனை மாத்திரை, அயசெந்தூரம்.

சில்லாலைமுத்துவைத்தியசாலை, 160, மேல்வீடு, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

வைத்தியர்: அ. செபஸ்தியாம்பிள்ளை.

(Q. 30. 11-5.43—10-11.43)

குறைந்த விலையில் **துணிகள்** ஷேட் துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்டோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம், பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 4th November 1943.